# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.170/2022 நாள்.23.02.2026

PW1- திரு. சுரேஷ் , த/பெ. திரு.துரைராஜன்

1, 2,3,5 மற்றும் 7ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதியின் அதிகார பெற்ற முகவர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். வாதி வசந்தாவுக்கு என்ன உறவு என்றால் மருமகன். எனக்கு எந்த வருடம் திருமணம் என்றால் 2012. திருமணத்திற்கு முன்பு எனக்கு அவர்களை பற்றி தெரியாது என்றால் ஆமாம். வாதியின் அப்பா சிவஞானத்தை நான் பார்த்ததில்லை என்றால் ஆமாம். திருமணம் செய்தபோது வாதியின் குடும்பம் கேரளாவில் இருந்தது என்றால் ஆமாம். வாதியின் கணவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் திருமணத்தின்போது வாதியின் கணவர் உயிருடன் இல்லை என்றால் ஆமாம். தாவா சொத்து சம்மந்தமாக புல எண்கள் தெரியும் என்றால் சிலவற்றுக்கு மட்டும் தெரியும். என்னென்ன சொத்து எங்கெங்கு இருக்கிறது என்று தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, கோப்புகளின் அடிப்படையில் தெரியும். வழக்கு சம்மந்தமாக மட்டும் நடத்துவதறகாகதான் எனக்கு அதிகாரம் கொடுக்கபட்டது என்றால் ஆமாம். வாதி அதிகாரம் கொடுக்கும்போது கோராளவில் இருந்தார் என்றால் கும்பகோணம் வந்து அதிகாரம் கொடுத்துவிட்டு திரும்ப சென்றார். அதிகார பத்திரம் கொடுக்கும்போது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்து சம்மந்தமாக ஏதாவது கிரைய ஆவணங்கள் பதிவு செய்த பத்திரங்கள் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சொத்துக்கள் சம்மந்தமாக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பாகபிரிவினை பரிகாரம். சிவஞானத்திற்கு எத்தனை பெண், எத்தனை மகன் என்றால் பெண்கள் 4பேர், ஆண்கள் 4 பேர். ஒரு ஆண் இறந்துவிட்டார். தாவா சொத்துக்கள் யாருடைய சொத்து என்று நான் பாகம் கோரியுள்ளேன் என்றால் வாதியின் தகப்பனார் சிவஞானத்திற்கு மூதாதையர்களிடமிருந்து பாகம் கிடைத்த சொத்துகளின் அடிப்படையிலும், அவர் கிரையம் பெற்ற அடிப்படையிலும் கோரியுள்ளேன். தாவா சொத்தில் ஏ அட்டவணையில் 1 முதல் 4 பாகம் மூலம் கிடைத்தது மற்றவை எல்லாம் அவர் கிரையம் வாங்கியது. சி அட்டவணை 2வது அயிட்ட சொத்து ஜனார்த்தன் மற்றும் முருகானந்தம் 4, 5ஆம் பிரதிவாதிகள் தனிதனியாக கிரையம் வாங்கியது என்றால் ஆமாம் அவர்களுக்கு அந்த காலகட்டத்தில் வருமானம் கிடையாது கூட்டுகுடும்ப சொத்துகளிலிருந்து வாங்கபட்டதுதான்.

அவ்வாறு நான் பிராதில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. 21.11.1996 தேதியில் 4, 5 பிரதிவாதிகள் என்ன வேலை பார்த்தார்கள், சம்பளம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. 24.2.1973 தேதியில் அஞ்சலையம்மாள் 1ஆம் பிரதிவாதி காவேரி மேற்கு விஸ்தரிப்பு மனை எண் 81 சொத்தை அவர் சொந்தமாக கிரையம் வாங்கினார் என்றால் ஆவணம் அவர் பெயரில் உள்ளது அவருக்கு தனிபட்ட வருமானம் இல்லை. மேற்படி சொத்து சி அட்டவணை 3வது இன சொத்து என்றால் ஆமாம். அந்த சொத்து சம்மந்தமாக 1ஆம் பிரதிவாதி 5ஆம் பிரதிவாதிக்கு 30.5.2002 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக கொடுத்துவிட்டார் என்றும் அதன் அடிப்படையில் அவர் அனுபவித்து வருகிறார் என்றும் சொன்னால் ஆமாம். அந்த ஆவணத்தில் எனது முதல்வர் 1ஆம் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆமாம். என்னுடைய பிராதில் சி அட்டவணை 3வது இனச்சொத்து சிவஞானம்தான் அவருடைய வருமானத்தை வைத்து 1ஆம் பிரதிவாதிக்கு வாங்கி வைத்தார் என்று எதுவும் கட்சி சொல்லவில்லை என்றால் ஆமாம். ஏ அட்டவணையில் 6அயிட்டம் மட்டும் காண்பித்து வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றால் ஆமாம். பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபிறகு சிவஞானம் அவருடைய மகன்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்று கட்சி செய்தபிறகு அந்த உயிலில் கண்ட மற்ற இனங்களையும் தாவா சொத்தாக சேர்த்துள்ளோம் என்றால் ஆமாம். என் மாமியாருக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் தேதி ஞாபகமில்லை, வருடம் 1980. அவர் திருமணமாகி கேரளாவில் செட்டிலாகியுள்ளார் என்றால் திருமணம் தஞ்சாவூரில் நடந்தது கேரளாவில் செட்டிலாகியுள்ளார். தாவா சொத்துக்களை யார் கிரையம் வாங்கினார்கள் எந்தெந்த சொத்துக்கள் இருந்தது என்று என் மாமியாருக்கே தெரியாது என்றால் சரியல்ல. திருமணமாகி குறிப்பிட்ட சில வருடங்களிலேயே எனது மாமனார் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் இறந்தவுடன் கேரளாவில் அவர் வேலை பார்த்ததால் வாரிசு அடிப்படையில் எனது மாமியாருக்கு கிடைக்கபெற்று அவர் அந்த வேலை பார்த்தார் என்றால் ஆமாம். சிவஞானம் சொத்துக்கள் சம்மந்தமாக 31.3.2008 இல் அவரது நான்கு மகன்களுக்கும் உயில் எழுதி வைத்து அவர் இறந்தபின்பு அந்த உயில் அமலுக்கு வந்து அவருடைய மகன்கள் எல்லாம் உயிலில் கண்ட சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. உயிலில் சாட்சியாக 1ஆம் பிரதிவாதியும், 7ஆம் பிரதிவாதியும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மாமியாரை தவிர பாக்கி அனைவரும் உயில் மற்றும் செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்றுகொண்டுள்ளார்கள் என்றால் தெரியாது. வழக்கு என்னுடைய துண்டுதலின்பேரில் தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில்

நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றும் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>13, 14 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

13, 14 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. அதனால் அவர்கள் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றும் சொன்னால் சரிதான். அதனால் அவர்களுக்கு எதிராக தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான்.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.23 19:45:57 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**